©
GOVERNMENT OF TAMIL NADU
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 97] CHENNAI, THURSDAY, MARCH 23, 2023
Panguni 9, Subakiruthu, Thiruvalluvar Aandu-2054

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a Section of the public issued by Secretariat Departments.**

**NOTIFICATIONS BY GOVERNMENT**

**LABOUR WELFARE AND SKILL DEVELOPMENT DEPARTMENT**

PERMITTING ALL SHOPS AND ESTABLISHMENTS TO KEEP OPEN ON ALL 365 DAYS FOR THE FURTHER PERIOD OF THREE YEARS UNDER THE TAMIL NADU SHOPS AND ESTABLISHMENTS ACT, 1947.

*[G.O. Ms. No. 55, Labour Welfare and Skill Development (K2), 21st March 2023,*
*பங்குனி 7, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2054.]*

**No. II(2)/LWSD/174(a)/2023.**

In exercise of the powers conferred by Section 6 of the Tamil Nadu Shops and Establishments Act, 1947 (Tamil Nadu Act XXXVI of 1947) and in continuation of the Labour and Employment Department Notification No. II(2)/LE/216/2020, published at Pages 1-2 of Part II —Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd March 2020, the Governor of Tamil Nadu, in public interest, hereby exempts all establishments from the provisions of sub-section (1) of Section 11 of the said Act and permits all the establishments in the State of Tamil Nadu to keep open on all 365 days of the year, for a further period of three years with effect from the 23rd March 2023, unless it is revoked, subject to the following conditions, namely:-

(1) Every employee shall be given one day holiday in a week on rotation basis and the details of every employee shall be provided in 'Form S' added to the Tamil Nadu Shops and Establishments Rules, 1948 and shall be exhibited by the employer in a conspicuous place in the establishments.

(2) Every employer shall exhibit details of the employees who are on holiday/ leave, on daily basis, in a conspicuous place in the establishments.

(3) The wages including overtime wages of the employees shall be credited to their savings bank account.

(4) An employer shall not require or allow any person employed to work therein for more than eight hours in any day and forty eight hours in any week and the period of work including over time shall not exceed ten hours in any day and fifty four hours in a week.

(5) If employees are found working on any holiday or after normal duty hours without proper indent of overtime, penal action will be initiated against the employer as laid down in the Tamil Nadu Shops and Establishments Act, 1947 (Tamil Nadu Act XXXVI of 1947) and the Tamil Nadu Shops and Establishments Rules, 1948.

(6) Women employees shall not be required to work beyond 8.00 p.m. on any day in normal circumstances:

Provided that the employer / manager after obtaining written consent of a woman employee shall allow her to work between 8.00 p.m. and 6.00 a.m. subject to providing adequate protection of her dignity, honour and safety.

(7) Transport arrangements shall be provided to the women employees who works in shifts. A notice to this effect shall be exhibited at the main entrance of the establishment indicating the availability of transport.

(8) The employees shall be provided with rest room, wash room, safety lockers and other basic amenities.

(9) Every employer employing women employees shall constitute Internal Complaints Committee against sexual harassment of women under the Sexual Harassment of Women at Workplace (Prevention, Prohibition and Redressal) Act, 2013 (Central Act 14 of 2013) and the said Committee shall be operative.

(10) The above said terms and conditions shall be treated and implemented in addition to those provisions specified in the Tamil Nadu Shops and Establishments Act, 1947 (Tamil Nadu Act XXXVI of 1947) and the Tamil Nadu Shops and Establishments Rules, 1948.

(11) In case of violation of any statutory provision or any of the above terms and conditions noticed by the Inspector or otherwise, necessary penal action will be initiated against the employer / manager as laid down in the Tamil Nadu Shops and Establishments Act, 1947 (Tamil Nadu Act XXXVI of 1947) and the Tamil Nadu Shops and Establishments Rules, 1948.

MD. NASIMUDDIN,
*Additional Chief Secretary to Government.*

**தமிழ்நாடு மாநிலத்திலிருக்கும் அனைத்து நிறுவனங்களையும் ஓராண்டின் 365 நாட்களிலும் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு திறந்து வைத்திருப்பது பற்றிய அறிவிக்கை**

*[G.O. Ms. No. 55, Labour Welfare and Skill Development (K2), 21st March 2023,*
*பங்குனி 7, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2054.]*

தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) 6ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 23.03.2020—ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டின் பாகம் II—பிரிவு 2—இல் 1—2 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/216/2020 ஆம் எண் அறிவிக்கையைத் தொடர்ந்தும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பொது நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து நிறுவனங்களையும் மேற்சொன்ன சட்டத்தின் 11 ஆம் பிரிவை சேர்ந்த (1) உட்பிரிவின் விதித்துறைகளிலிருந்து விலக்களித்து, அவை திரும்பப் பெறப் பெற்றாலன்றி, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 23.03.2023 ஆம் நாளிலிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு, தமிழ்நாடு மாநிலத்திலிருக்கும் அனைத்து நிறுவனங்களையும் ஓராண்டின் 365 நாட்களிலும் திறந்து வைத்திருப்பதற்கு இதனால் அனுமதிக்கிறார் அவையாவன:—

(1) சுழற்சி முறையில் ஒவ்வொரு பணியாளருக்கும் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பட்டும், ஒவ்வொரு பணியாளரின் விவரங்களும் தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் சேர்க்கப்பட்டுள்ள 'படிவம் S'—இல் அளிக்கப்பட்டு நிறுவனங்களில் நன்கு தெரியும் வகையிலான இடத்தில் வேலையளிப்பவரால் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(2) ஒவ்வொரு வேலையளிப்பவரும், நாள்தோறும், விடுமுறையில் / விடுப்பில் இருக்கும் பணியாளர்களின் விவரங்களை நிறுவனங்களில் நன்கு தெரியும் வகையிலான இடத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(3) மிகைநேரப் பணி ஊதியங்கள் உட்பட, பணியாளர்களின் ஊதியங்கள், அவர்களது வங்கி சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(4) வேலையளிப்பவர், அங்கு பணியமர்த்தப்படும் யாதொரு நபரை, யாதொரு நாளிலும் எட்டு மணி நேரத்திற்கு மிகையாக, யாதொரு வாரத்திலும் நாற்பத்து எட்டு மணி நேரத்திற்கு மிகையாகப் பணிபுரிவதற்கு கோரவோ அல்லது அனுமதிக்கவோ கூடாது, மேலும், மிகைநேரப் பணி உட்பட, பணிபுரியும் கால அளவானது, யாதொரு நாளிலும் பத்து மணி நேரத்திற்கு மிகாமலும், வாரம் ஒன்றிற்கு ஐம்பத்து நான்கு மணி நேரத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(5) மிகைநேரப் பணிக்கான முறையான கோரிக்கை இல்லாமல், யாதொரு விடுமுறை நாளிலோ அல்லது வழக்கமாக பணி நேரங்களுக்குப் பின்னரோ, பணியாளர்கள் பணிபுரிவதாகக் கண்டறியப்பட்டால், தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1947) மற்றும் தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, வேலையளிப்பவர் மீது தண்டனையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

(6) வழக்கமான சூழல்களில், பெண் பணியாளர்களை இரவு 8.00 மணிக்கு மேல் பணிபுரியுமாறு கோரக்கூடாது. இருப்பினும் பெண் பணியாளரின் மதிப்பு, மரியாதை மற்றும் பாதுகாப்பிற்கு தக்க நடவடிக்கைகளை வேலையளிப்பவர் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அப்பெண் பணியாளரிடமிருந்து எழுத்துப்பூர்வ ஒப்புதல் பெற்றப் பின்னரே அப்பெண் பணியாளரை இரவு 8.00 மணி முதல் காலை 6.00 மணி வரை பணி செய்ய அனுமதிக்க வேண்டும்.

(7) முறைமாற்றுப் பணிகளில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு, போக்குவரத்து வசதிகளுக்கு வகைசெய்யப்பட வேண்டும். இவ்வகையில், போக்குவரத்து வசதிகள் கிடைக்கப் பெறுவதைக் குறிப்பிடும் அறிக்கை ஒன்று, நிறுவனத்தின் முதன்மை நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(8) பணியாளர்களுக்கு ஓய்வறை, கழிவறை, பாதுகாப்புப் பெட்டகங்கள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(9) பெண் பணியாளர்களைப் பணியமர்த்தும் ஒவ்வொரு வேலையளிப்பவரும், 2013 ஆம் ஆண்டு பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை (பாதுகாத்தல், தடுத்தல் மற்றும் குறை களைதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/2013) கீழ் பெண்கள் மீதான பாலியல் தொல்லைகளுக்கு எதிராக, 'உள் புகார்கள் குழு' ஒன்றை அமைக்க வேண்டும். மேற்சொன்ன குழு செயல்பாட்டில் இருக்க வேண்டும்.

(10) 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1947) மற்றும் தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதித்துறைகளுடன், மேற்சொன்ன வரையறைகளும் நிபந்தனைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும்.

(11) சட்ட விதித்துறை அல்லது மேற்சொன்ன வரையறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்படுவது, ஆய்வாளரால் அல்லது ஏனைய வகையில் கண்டறியப்படும் நேர்வில், தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1947) மற்றும் தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு வேலையளிப்பவருக்கு எதிராக தண்டனையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU